குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.77/2021

ம.சா. 1

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்ரமணி | தொழில் | |
| தந்தை பெயர் | சித்துராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.43 மணி,

Complainant Balasubramani present. Advocate Mr.P.Soundhararajan present for Complainant. Accused Murugan absent. Petition u/s 355 BNSS filed and allowed. Advocate Mr.B.Sivaraman present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) கூடுதலாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனக்கு தெரியும் எத்தனை ஆவணங்கள் என்றால் 4 ஆவணங்கள் ஆகும். முதலில் 17.12.2021 ம் தேதி எனது முதல் விசாரணை நடைபெற்றது. 29.12.2021 ம் தேதியில் குறுக்கு விசாரணை நடந்தது. அதன் பின்னிட்டு 28.03.2022 ம் தேதி அன்று கூடுதல் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்து ஆவணங்கள் 12.04.2022 ம் தேதி குறியீடு செய்யப்பட்டது என்றால் சரி. எனக்கு 3 வங்கிகளில் வங்கி கணக்கு இருக்கிறது. 1) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, காடையாம்பட்டி கிளை 2) SBI தீவட்டிப்பட்டி கிளை 3) இந்தியன் வங்கி தீவட்டிப்பட்டி கிளைகளில் வங்கி கணக்கு உள்ளது.

2) எனது வங்கி கணக்கின் பட்டியலை என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வருமானத்தை நிரூபிக்க தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ–5 ஆவணத்தில் 05.08.2019 ம் தேதி முதல் 12.12.2019 ம் தேதி வரை ரூ.10,796/– இருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரி. 01.01.2017 முதல் 24.12.2021 வரையிலான வங்கி கணக்கு பட்டியிலில் 23.02.2021 ம் தேதியில் காசோலை எண் 645001 ரூ.6,00,000/– க்கான காசோலை வங்கியில் செலுத்தப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. அதே தேதியில் போதுமான பணம் இல்லை என்று சொல்லி மேற்படி காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் அந்த வழக்கு திருப்பப்பட்டதற்காக பூமிநாதன் என்பவருக்கு எதிரிராக இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து முடிந்துவிட்டது.

3) மேற்படி வழக்கு இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக தாக்கல் செய்தேன் என்றால் சரி. முந்தைய வழக்கு தொடர்பான சங்கதிகளை தற்போதைய வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி. 14.07.2021 ம் தேதி இவ்வழக்கு காசோலை 349926 சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ– 5 ஆவணத்தில் 18.12.2021 ம் தேதி என்னுடைய வங்கி கணக்கில் ரூ.12,876/– இருந்தது என்றால் சரி.

ம.சா.ஆ–5 ஆவணத்தில் எனது வங்கி கணக்கில் ரூ.10,00,000/– மற்றும் ரூ.20,00,000/– இருந்ததற்கான குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரி.

4) ம.சா.ஆ–6 ஆவணத்தில் 06.11.2020 ம் தேதி ரூ.9,00,000/– ம் தேதி Batch credit என்று எனது வங்கி கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது, அன்றைய தேதியிலேயே மேற்படி 9 லட்சத்தை எடுத்துள்ளதாக இருக்கிறது என்றால் சரி. மேற்படி 9 லட்சம் பற்றி இவ்வழக்கு ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, ஆரம்பத்தில் சொல்லவில்லை, கூடுதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் என்னுடைய கூடுதல் பிரமாண பத்திரிக்கையில் எந்த இடத்தில் மேற்படி சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. ம.சா.ஆ–6 ஆவணத்தில் என்னுடைய Closing balance 30.09.2021 ம் தேதியில் ரூ.2,885/– உள்ளது என்றால் சரி. ம.சா.ஆ–6 ஆவணத்தில் எனது வங்கி கணக்கில் ரூ.10,00,000/– மற்றும் ரூ.20,00,000/– இருந்ததற்கான குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரி. ம.சா.ஆ–6 ஆவணத்தில் 06.12.2021 ம் தேதி எனது வங்கி கணக்கிற்கு வந்த 9 லட்சத்தை வைத்து தான் இவ்வழக்கின் எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை.

5) SBI வங்கியில் விவசாய கடன் வாங்கியுள்ளேனா என்றால் சரி. மேற்படி கடன் நகையை அடமானம் வைத்து வாங்கியதாகும். மேற்படி கடனை கட்ட முடியாமல் போனால் வட்டி மற்றும் அசல் தொகையை செலுத்துவிட்டு புதுப்பித்து கொள்ள இயலும் என்றால் சரி. ம.சா.ஆ–7 ஆவணத்தில் 01.01.2018 முதல் 31.12.2018 ம் தேதி வரை காட்டப்பட்டுள்ள பட்டியலில் 16.10.2018 ம் தேதி என்னுடைய வேறு வங்கி கணக்கில் இருந்து ரூ.1,00,000/– மற்றும் ரூ.1,80,000/– வரவு வைக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. அதே தேதியில் ரூ.2,72,039/– என்ற தொகையை AGL closure செய்து நான் வாங்கிய கடனுக்கு செலுத்தப்பட்டது என்றால் சரி. ம.சா.ஆ–7 ஆவணத்தில் 01.01.2019 முதல் 31.12.2019 ம் தேதி வரை காட்டப்பட்டுள்ள பட்டியலில் 25.10.2019 ம் தேதி ரூ.18,000/– பணம் எடுத்ததாகவும், 21.11.2019 bulk posting by salary என்று ரூ.7,500/– வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரி. 02.12.2019 ம் தேதி ரூ.7,000/– வங்கியில் இருந்து எடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. ம.சா.ஆ–7 ஆவணத்தில் எனது வங்கி கணக்கில் ரூ.10,00,000/– மற்றும் ரூ.20,00,000/– இருந்ததற்கான குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரி. 20.12.2021 ம் தேதி எனது வங்கி கணக்கில் closing balance ரூ.1,22,380.39/– இருக்கிறது என்றால் சரி.

எதிரி தரப்பு வழக்கிறஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.15 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.